TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**
**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**

## Part VI --- Section 2
(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

---

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–5, 20. 07. 2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் இதன்

பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21. 07. 2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்</u> :

(a) இந்த விதித் தொகுப்பு, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித்தொகுப்பு, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. <u>(a) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,</u> –

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில், 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் (14)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் (a)கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

‘‘(a) உள்புற மின்னளவிக்காக, தரைப்பகுதி 5 மீட்டர்கள் x 6 மீட்டர்கள் அளவு கொண்ட செங்குத்தான இடைவெளியுள்ள 3.7 மீட்டர்கள் பூட்டக்கூடிய வசதியுடன் தரைதளம் மற்றும் கூரை / தூணின் அடிக்குமிடையே கூரையில் வலுவூட்டிய கற்காறை போடப்பட்ட மின்சார அறை, வளிப்போக்கி மின் விசிறிகள் மற்றும் போதிய அளவுள்ள மின் வடக்குழல் வசதிகளுக்கு தரைத்தளம் / அடித்தளத்தில், உரிமம்தாரரின் சாதனங்கள், முதலியவற்றை நிறுவதற்காக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். இந்த அறை தீப்பற்றாத மற்றும் நீர்புகாததாக இருத்தல் வேண்டும்.’’

(b) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில், பின்னிணைப்பு III–இல் படிவம் 4இல், இனம் 6இன் கீழுள்ள குறிப்பிற்குப் பதிலாக பின்வரும் குறிப்பு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

<u>குறிப்பு</u> : விண்ணப்பம் பின்வரும் ஆவணங்களுடன் சேர்ந்து போதல் வேண்டும் :–

(1) (a) விண்ணப்பதாரர் வளாகத்தின் சொந்தக்காரராக இருக்கும் போது : அவர்கள் சார்பாக எழுதிக் கொடுக்கப்பட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிடப்பட்ட நகல்,

அல்லது

விண்ணப்பதாரரின் பெயரிலுள்ள வளாகத்திற்கான சொத்துவரி ரசீது.

(b) விண்ணப்பதாரர் வளாகத்தின் சொந்தக்காரராக இல்லாத போது வளாக உரிமையாளர் அனுமதி பெற்ற கடிதம்,

அல்லது

(குத்தகைப்பத்திரம் உள்ளடங்கலான) சட்டப்படியான குடியிருப்புக்கான நிரூபணத்துடன் சேர்த்து பின்வருவன :–

(a) படிவம் 6இல் ஈடுறுதிபிணை முறி.

(b) வழக்கமான வீதத்தைவிட இரண்டு மடங்கு பிணைய வைப்பீட்டுத் தொகை செலுத்துவதற்குரிய ஏற்புக்கடிதம்.

(2) கூட்டாண்மை நிறுவனமாக இருக்கும் விண்ணப்பதாரரைப் பொறுத்தவரை, கூட்டாண்மைப்பத்திரம் அல்லது நிறுமங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுமங்களைப் பொறுத்தவரை, சங்க அமைப்பு விதித் தொகுப்பு / சங்க அமைப்புவிதிகள்.

(3) கையொப்பமிட்டவரின் அதிகாரமளிக்கும் கடிதம் / தீர்மானம்.

(4) இடத்தின் வரைபடம். ''

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

இரா.  பாலசுப்பிரமணியன்
செயலாளர்